Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 479/2018 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW1 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | கார்த்திகேயன் |
| Father's Name | – | மாகாளி |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 18th August 2023.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused present.

**முதல் விசாரணை** :

நான் தற்போது சேலம் மாவட்டம் ஓமலூர் தாலுக்கா தாரமங்கலம் அம்பேத் நகரில் குடியிருந்து கொண்டு சம்பவ சமயத்தில் Exide ஆயுள் காப்பீட்டு நிறுவனத்தில் வேலை செய்தேன். தற்போது HDFC Bank ல் உதவி மேலாளராக பணியாற்றிவருகிறேன். ஆஜர் எதிரி எனது அக்காவின் கணவர். கடந்த 08.09.2017 ம் தேதி ஆஜர் எதிரி என் தாயாருக்கு அலைபேசியில் அழைத்து என் அக்கா ஏதோ சாப்பிட்டுவிட்டு படுத்துவிட்டார், மருத்துவமனைக்கு அழைத்தால் வர மறுக்கிறார் என்று கூறியுள்ளார். அதனைத் தொடர்ந்து எனது தாயார் என்னை அழைத்து தகவல் கூறினார்.

நான் அலுவலகத்தில் இருந்து உடனே எனது வீட்டிற்குச் சென்றேன். பின்பு இரு சக்கர வாகனத்தில் எனது தாயாரை அழைத்துக் கொண்டு எனது அக்கா வீட்டிற்குச் சென்றேன். அங்கு சென்று பார்த்தபோது எனது அம்மா என் அக்காவிடம் என்னவென்று கேட்டார்கள். அதற்கு என் அக்கா மருந்து எதுவும் நான் சாப்பிடவில்லை என கூறினார்.என் அக்காவின் பெரிய மகன் பிரணீஷ் ஐ அழைத்து கேட்கலாம் என முடிவு செய்தபோது ஆஜர் எதிரி என்னை தடுத்தார்.

பின்பு ஆஜர் எதிரியின் உறவினர் வீட்டினுள் இருந்து வந்து என்னை என்னடா என்று கேட்டு ஆபாசமான வார்த்தையால் திட்டி அடித்தார். பின்னர் ஆஜர் எதிரியும் அவரது அம்மா மற்றும் உறவினர்கள் சேர்ந்துகொண்டு என்னை அடித்தார்கள். நான் கீழே விழுந்துவிட்டேன். ஆஜர் எதிரியின் உறவினர் பஞ்சலிங்கம் என்பவர் என் மீது ஏறி உட்கார்ந்து கன்னத்தில் அடித்தார். பின்னர் ஆஜர் எதிரியும் அவரது அம்மாவும் என் மீது ஏறி அமர்ந்து கொண்டு அடிக்க பஞ்சலிங்கத்தை தடுக்கவிடாமல் என்னையும் அடித்தார்கள்.

இந்த சம்பவத்தைப் பார்த்த என் அம்மாவும் என் அக்காவும் ஏன் அடிக்கிறீர்கள் என கேட்டபோது பக்கத்தில் இருந்த கல்லை ஆஜர் எதிரியின் அம்மா எடுத்து கொடுக்க பஞ்சலிங்கம் என் மீது தாக்க முற்படும்போது என் அம்மா அதைத் தடுத்தார். அப்போது என் தாயாரின் மோதிர விரலில் அடிபட்டது. பின்னர் நான் திமிறி எழ முயற்சிசெய்யும்போது ஆஜர் எதிரி என் கால் முட்டி மீது உட்கார்ந்ததால் எனக்கு எலும்பு முறிவு ஏற்பட்டது. நான் சத்தம் போடுவதைப் பார்த்து அக்கம்பக்கத்தில் இருந்தவர்கள் சம்பவத்தைத் தடுத்தார்கள்.

அச்சமயம் இரவு சுமார் 11 மணியிருக்கும். அப்பொழுதே மகளிர் காவல்நிலையம், பொள்ளாச்சிக்குச் சென்று புகார் அளித்தோம். போலிசார் என் தாயாரின் கையில் அடிபட்டதால் முதலில் மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சை எடுங்கள், நாங்கள் காலையில் வந்து விசாரிக்கிறோம் என கூறினார்கள். பின்பு மறுநாள் காலை போலிசார் மருத்துவமனை வந்து விசாரித்தனர். பின்பு நான் எனது வீட்டாரிடம் கலந்து ஆலோசித்து

விட்டு 13.09.2017 ம் தேதி காவல்நிலையம் சென்று புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் எழுதியதுதான் அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் **அசாஆ.1** ஆகும். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

வழக்கறிஞருக்கு வாய்ப்பளித்தும் குறுக்குவிசாரணை செய்யவில்லை.

**மறுவிசாரணை**

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(S/d.Tr. E.Pragasam)

Judicial Magistrate No. II,
Pollachi.

Judicial Form No.53

(See Rule 43)

## DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 479/2018 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW2 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | ஜோதி |
| Father's Name | – | க/பெ மாகாளி |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 18th August 2023.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused present.

**முதல் விசாரணை** :

நான் தற்போது சேலம் மாவட்டம் ஓமலூர் தாலுக்கா தாரமங்கலம் அம்பேத் நகரில் குடியிருந்து வருகிறேன். கடந்த 08.09.2017 ம் தேதி நான் வீட்டில் இருந்தேன், காளியாபுரத்தில் என் மகளை ஆஜர் எதிரிக்கு திருமணம் செய்து கொடுத்தேன், மேற்படி தேதியில் ஆஜர் எதிரி எனது மகள் எதையோ சாப்பிட்டுவிட்டு வாந்தி எடுத்துக் கொண்டிருக்கிறது நீங்கள் வாருங்கள் என கூறினார்,

நான் வரவில்லை மருத்துவமனை அழைத்துச்சென்று பாருங்கள் என கூறினேன், அதற்கு அவர் நான்அழைத்தும் வரவில்லை , அதனால் நீங்கள் வாருங்கள் என கூறினார். நான் என் மகளிடம் போன் கொடுங்கள் பேசுகிறேன் என கூறினேன்., என் மகள் நான் எதுவும் சாப்பிடவில்லை நீ இங்கு வரவேண்டாம் என கூறினார்.

ஆஜர் எதிரி என்னை மறுபடியும் வருமாறு கூறினார்,, பின்னர் நான், எனது மகனுக்கு தகவல் கூறி எனது மகன் வீட்டிற்கு வந்தார் என்து மகனுடன் நான் இரு சக்கர வாகனத்தில் எனது மகள் வீட்டிற்கு சென்றேன், என் மகளிடம் என்னவென்று கேட்டேன்., எனது மகள் நான் எதுவும் சாப்பிடவில்லை என கூறினார். நான் பேசிக்கொண்டிருக்கும்போது எனது மருமகன் வந்தார்.

என் மகள் எனது பேரனை அழைத்து கேளுங்கள் உண்மையை கூறுவான் என கூறினார். எனது பேரன் தூங்கிவிட்டதால் நான் இரவு கேட்கவில்லை. உடனே ஆஜர் எதிரி அவரது அத்தை பையனுக்கு அழைத்தார் அவர் உடனே என் மகள் வீட்டிற்கு வந்தார்,

அப்போது எனது மகன் என் பேரனை அழைத்து கேட்கலாமா என கேட்டதற்கு ஆஜர் எதிரி என் மகனை ஓங்கி அடித்துவிட்டார், அதனால் எனது மகன் கீழே விழுந்துவிட்டார், பின்னர் என் மகனை அடித்தார்கள். அப்போது என் மகனை கல்லால் அடிக்க வந்தார்கள், நான் தடுத்தேன், அதனால் எனது இடது கை சுண்டுவிரல் மற்றும் மோதிர விரலில் உள்ள எலும்புகள் உடைந்து காயம் ஏற்பட்டது, பின்னர் நாங்கள் காவல் நிலையம் சென்றோம், பின்னர் காவலர்கள் என்னை மருத்துவமனைக்கு முதலில் செல்லுமாறு அறிவுறுத்தினார்கள், நான் மருத்துவமனை சென்றேன். பின்னர் மருத்துவமனையில் 4 நாட்கள் சிகிச்சை பெற்றேன், மருத்துவர்கள் ஸ்கேன் செய்து பார்த்து விரல் எலும்புகள் உடைந்ததாக கூறினார்கள், பின்னர் போலிசார் மறுநாள் காலை மருத்துவமனை வந்து விசாரணை செய்தார்கள். பின்னர் புகார் எழுதிக் கொடுத்துவிட்டு ஊருக்கு சென்றுவிட்டோம். இது குறித்து போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

வழக்கறிஞருக்கு வாய்ப்பளித்தும் குறுக்குவிசாரணை செய்யவில்லை.

**மறுவிசாரணை**

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(S/d.Tr. E.Pragasam)

Judicial Magistrate No. II,
Pollachi.

**Judicial Form No.53**

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 479/2018 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW3 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | மாரிமுத்து |
| Father's Name | – | த/பெ வீரமுத்து |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 18th August 2023.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused present.

**முதல் விசாரணை :**

நான் தற்போது ஆவலப்பம்பட்டியில் குடியிருந்துகொண்டு கூலி வேலை செய்து வருகிறேன், இந்த வழக்கு தொடர்பாக போலிசார் என்னை சாட்சியம் அளிக்க அழைத்தார்கள். நான் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியம் அளிக்க வந்தேன். போலிசார் காவல் நிலையத்தில் வைத்து என்னிடம் பார்வை மகசரில் கையொப்பம் வாங்கினார்கள், அந்த பார்வை மகசரில என்ன எழுதியிருந்தது என எனக்கு தெரியாது. அந்த பார்வை மகசரில் உள்ள 1 வது கையொப்பம் என்னுடையதுதான், அந்த கையொப்பம் **அ த சா ஆ 2.** ஆகும்

அரசுதரப்பு சாட்சி அனுசரியாத சாட்சியாக கருதுவதால் அரசுதரப்பில் இந்திய சாட்சிய சட்டம் 1872 பிரிவு 154 ன் கீழ் விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அனுமதி வழங்கப்பட்டது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 13.09.2017- ந்தேதி நானும் எனது நண்பர் அருளானந்தம் என்பவரும் சொந்தவேலையாக ஜி. காளியாபுரம் வந்திருந்தபோது அங்குள்ள வெள்ளியங்கிரி வீட்டுக்கு பக்கம் கூட்டமாக இருந்ததை பார்த்து நெகமம் காவல்நிலைய உதவி ஆய்வாளராக தாங்கள் எங்கள் இருவரையும் விசாரித்து வெள்ளியங்கிரிக்கும் அவரது மனைவி விஜயாவிற்கும் குடும்ப பிரச்சனை ஏற்பட்டு அதனால் பிணக்கம் ஏற்பட்டிருந்ததை கேள்விபட்ட அம்மாவும், விஜயாவின் தம்பி கார்திகேயனும் கடந்த 08.09.2017 ந் தேதி விஜயா வீட்டிற்கு வந்து விசாரித்துக் கொண்டிருந்தபோது வெள்ளிங்கிரிக்கும், அவரது அம்மா, தம்பிக்கும் வாக்குவாதம் ஏற்பட்டதாகவும் அதனால் கார்த்திகேயனை பஞ்சலிங்கம் மற்றும் வெள்ளியங்கிரி ஆகியோர் முகத்தில் குத்தியதாகவும் மேற்படி சம்பவம் குறித்து இன்று 13.09.2017 - ந் தேதி இரவு 07.30 மணிக்கு உதவி ஆய்வாளராகிய தாங்கள் விசாரித்ததில் நான் பார்வை மகசர் சாட்சியாக கையொப்பம் செய்தேன் என்று கூறிவிட்டு தற்போது எதிரியை காப்பாற்ற வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(S/d.Tr. E.Pragasam)

Judicial Magistrate No. II,
Pollachi.

Judicial Form No.53

(See Rule 43)

## DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 479/2018 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW4 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | அருளானந்தம் |
| Father's Name | – | த/பெ திருமலை |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 18th August 2023.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused present.

**முதல் விசாரணை** :

நான் தற்போது கொண்டேகவுண்டன்பாளையத்தில் குடியிருந்து கொண்டு கூலி வேலை செய்து வருகிறேன், இந்த வழக்கு பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. இது தொடர்பாக போலிசார் என்னை சாட்சியம் அளிக்க அழைத்தார்கள். நான் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியம் அளிக்க வந்தேன். போலிசார் காவல் நிலையத்தில் வைத்து என்னிடம் பார்வை மகசரில் கையொப்பம் வாங்கினார்கள், அந்த பார்வை மகசரில் என்ன எழுதியிருந்தது என எனக்கு தெரியாது. அந்த பார்வை மகசரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையதுதான், அந்த கையொப்பம் **அ த சா ஆ 3.**ஆகும்.

அரசுதரப்பு சாட்சி அனுசரியாத சாட்சியாக கருதுவதால் அரசுதரப்பில் இந்திய சாட்சிய சட்டம் 1872 பிரிவு 154 ன் கீழ் விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அனுமதி வழங்கப்பட்டது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 13.09.2017- ந் தேதி நானும் எனது நண்பர் அருளானந்தம் என்பவரும் சொந்தவேலையாக ஜி காளியாபுரம் வந்திருந்த போது அங்குள்ள வெள்ளியங்கிரி வீட்டுக்கு பக்கம் கூட்டமாக இருந்ததை பார்த்து நெகமம் காவல்நிலைய உதவி ஆய்வாளராக தாங்கள் எங்கள் இருவரையும் விசாரித்து வெள்ளியங்கிரிக்கும் அவரது மனைவி விஜயாவிற்கும் குடும்ப பிரச்சனை ஏற்பட்டு அதனால் பிணக்கம் ஏற்பட்டிருந்ததை கேள்விபட்ட அம்மாவும், விஜயாவின் தம்பி கார்திகேயனும் கடந்த 08.09.2017 ந் தேதி விஜயா வீட்டிற்கு வந்து விசாரித்துக் கொண்டிருந்தபோது வெள்ளிங்கிரிக்கும் அவரது அம்மா, தம்பிக்கும் வாக்குவாதம் ஏற்பட்டதாகவும் அதனால் கார்த்திகேயனை பஞ்சலிங்கம் மற்றும் வெள்ளியங்கிரி ஆகியோர் முகத்தில் குத்தியதாகவும் மேற்படி சம்பவம் குறித்து இன்று 13.09.2017 - ந்தேதி இரவு 07.30 மணிக்கு உதவி ஆய்வாளராகிய தாங்கள் விசாரித்ததில் நான் பார்வை மகசர் சாட்சியாக கையொப்பம் செய்தேன் என்று கூறிவிட்டு தற்போது எதிரியை காப்பாற்ற வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை .**இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(S/d.Tr. E.Pragasam)

Judicial Magistrate No. II,
Pollachi.